**OS**.**No**. 250/2017 **C/W OS No**.470/18

**DW** 1- கோவிந்தராஜ் த/பெ. வெங்கடபதி

நாள். 20.03.2023

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தற்போது என்னிடம் காட்டப்படும் வ.த.சா.ஆ 19 தினமலர் செய்தித்தாளில் 10.12.2014 ல் பொது அறிவிப்பு வழங்கப்பட்டு இருந்தது என்றால் ஆமாம். மேற்படி பொது அறிவிப்பு வாதி தரப்பில் வா.த.சா 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வெளிநாட்டு கம்பெனியில் வேலை பார்த்து வந்ததால் நான் ஒரு மாதத்தில் அதிகப்படியான நாட்கள் கம்பெனிக்கு வேலைக்காக வெளியில் இருப்பேன் என பதில் உரையில் கூறியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. அதிகப்படியான மாதத்தில் 21 நாட்கள் வெளியில் தான் இருப்பேன். நான் மாதத்தில் அதிக நாட்கள் வெளியில் இருப்பதாக சொல்லியுள்ளது வெளிநாடு செல்வதா என்றால் வெளிறாடும் செல்வேன் வெளி மாநிலங்களுக்கும் செல்வேன். என்னுடைய பாஸ்போர்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனொ என்றால் இல்லை. பாஸ்போர்டை தாக்கல் செய்தால் நான் எப்போது எல்லாம் வெளிநாடு சென்றேன் என்ற விவரத்தை தெரிந்து கொள்ள முடியும் என்றால் ஆமாம். நான் எப்போது ஒன்று இரண்டு முறை தான் வெளிநாடு சென்றுள்ளேன் என்றாலும் பாஸ்போர்டை தாக்கல் செய்தால் மேற்படி விவரம் தெரியவத்நது விடும் என்பதால் தான் வேண்டுமென்றே அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இதுவரை 5 பாஸ்போர்ட் புத்தகம் வாங்கியுள்ளேன்.

2. இந்த வழக்கிலும் அசல் வழக்கு எண் 470/18 லும் என்னுடைய வழக்கறிஞர் ஒருவர் தான் என்றால் இரண்டு வழக்கறிஞர். இரு வழக்கிலும் தினேஷ்குமார் வழக்கறிஞர் தான் தற்போது உள்ளார் என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் சொல்லிதான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அசல் வழக்கு எண் 470/18 லும் நான் சொல்லிதான் வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அசல் வழக்கு எண் 250/17 ல் 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர்கள் இருவர் தான் என்றும் அவர்கள் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் தான் எனவும் 1.2.2008 ல்

ஆரமிக்கப்பட்டது உண்மைதான் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அசல் வழக்கு எண் 470/18 லும் 3ம் வாதி நிறுவனத்தின் பங்குதாரர்களாக நானும் 1ம் பிரதிவாதியும் 2007 லிலேயே 3ம் வாதி நிறுவனத்தை ஆரமித்து விட்டோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

3. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் தான் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை இரு வழக்குகளுக்காகவும் சேர்த்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 6 பேர் சேர்ந்து 2007 லிலேயே 3ம் பிரதிவாதி நிறுவனத்தை ஆரமித்தாக சொல்லியுள்ளதை காட்டுவதற்க்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் எதுவும் வழக்கறிஞரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு 6 பேர் அடங்கிய கூட்டாண்மை ஒப்பந்த பத்திரத்தை தாக்கல் செய்யாமல் பொய்யான விவரங்களுடன் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. இரண்டு வழக்குகளிலும் 1ம் வாதி தன்னிச்சையாக விலகியதை காட்டுவதற்காக பி.த.சா 5 யை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். பி.த.சா 5 கடிதத்தில் வங்கி மேலாளருக்கு விலாசம் இட்ட கடிதத்தில் 1ம் வாதி அனுப்பிய கடிதத்தில் Left the Firm எனும் வார்த்தைக்கொண்டு குறிப்பிட்டுள்ளோம் என்றால் ஆமாம். Left என்பதற்கும் Resign என்பதற்கும் Relieve என்பதற்கும் வெவ்வேறு அர்த்தம் என்றால் அது தெரியவில்லை. மேற்படி கடிதத்தில் Left என குறிப்பிட்டுள்ளது அந்த சமயத்தில் 3ம் பிரதிவாதி நிறுவனத்தை 1ம் வாதி இல்லை என்பதை தான் குறிப்பிடுகிறது என்றால் சரியல்ல. விலகிவிட்டார் என்பதை தான் குறிக்கிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா 15 எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 23.8.2016. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் டின் நம்பர் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

5. அசல் வழக்கு எண் 470/18 லும் 3ம் வாதி நிறுவனத்தின் டின் நம்பர் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அசல் வழக்கு எண் 250/17 ல் 3ம் பிரதிவாதி

நிறுவனமும் 470/18 லும் 3ம் வாதி நிறுவனமும் ஒன்று தான் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் டின் நம்பர் நன்கு தெரிந்து இருந்தும் முந்தைய நாள் குறுக்கு விசாரணையில் வா.த.சா 4 ல் கண்டுள்ள டின் நம்பர் தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கின் வாதியை குறுக்கு விசாரணை செய்த போது திருப்பூர் லட்சுமி நகர் ஸ்டேட் பாங் ஆப் இந்தியா வங்கியில் மோசடியாக கணக்கு துவங்கியது தெரியவந்த பிறகு 2ம் பிரதிவாதி காவல் துறையில் வா.த.சா 5 மற்றும் 6 ன் கீழ் புகார் செய்துள்ளார் என கருத்துரை மேற்கொள்ளப்பட்டது என்றால் அது தெரியும். அவ்வாறு வழக்கறிஞரை கருத்துரை மேற்கொண்டுள்ள நிலையில் நான் சென்ற முறை 10.3.2023 தேதிய குறுக்கு விசாரணையில் மேற்படி புகார்கள் குறித்து தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஞாபகம் இல்லை என்று தான் சொல்லியுள்ளேன். அந்த புகாரை காட்டி கேட்டபோதே நான் கொடுக்கவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் ஆவணத்தை பார்த்த பிறகு தான் அதில் உள்ள சங்கதிகள் தெரியவந்தது. அதனால் தான் கொடுக்கவில்லை என சொல்லியுள்ளேன்.

6. வா.த.சா 5 மற்றும் 6 பொது ஆவணம் என்றால் அது பற்றி தெரியவில்லை. வா.த.சா 5 மற்றும் 6 பொது ஆவணம் என்பதால் அதன் சான்றிட்ட நகல் பெற்றுதான் வாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் புகார் கொடுத்த விவரம் ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 470/18 ல் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா 6 உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ஆன எனது மனைவியும் 1ம் வாதியும் செய்து கொண்ட கூட்டாண்மை ஒப்பந்தத்தை ரத்து செய்து விடலாம் என எனது மனைவிக்கு அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. மேற்படி ஒப்பந்தத்திலேயே Partnership At Will எனகுறிப்பிடப்பட்டுள்ளது. Partnership At Will என்பது காலவரையறை இல்லை என்பதையும் எப்போது வேண்டுமாலும் பங்கு தாரர் விருப்பப்படி கலைத்துக்கொள்ளலாம் என்பதை குறிக்கிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ஆன எனது மனைவிக்கு 1ம் வாதி 3ம் பிரதிவாதி நிறுவனத்திலிருந்து Relieve ஆகிவிட்டதாக நேரடியாக கடிதம் அனுப்பினாரா என்றல் இல்லை. வங்கிக்கு அனுப்பிய கடிதத்தில் எனக்கு நகல் வந்தது.

7. நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா 9 எனது மனைவி வாதிகளுக்கு எதிராக கொடுத்த புகார் என்றால் ஆமாம். மேற்படி புகாரை குற்றவியல் நீதிதுறை நடுவர் எண் 2 ல் தாக்கல் செய்தோம் என்றால் ஆமாம். மேற்படி புகாருடன் 10–12 ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் ஆவணங்கள் இணைப்பு விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி பி.த.சா 9 இணைப்பில் காட்டப்பட்டுள்ள 1.7.2011 தேதிய வி.எஸ்.கனேசன் என்பவர் இந்த வழக்கில் வாதிகளுக்கு ரூ15 லட்சம் கொடுத்தாக காட்டும் கடிதம் என்றால் ஆமாம். 1.7.2011 தேதிய வி.எஸ்.கனேசன் தாக்கல் செய்த கடிதம் 1ம் வாதியால் கையெழுத்து செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட கடிதம் அல்ல என்றால் கனேசன் தான் கொடுத்துள்ளார் அது கனேசசை விசாரித்தால் மேற்படி விவரம தெரியவரும் ஆனால் ஆவணத்தை நான் தான் தாக்கல் செய்துள்ளேன். பி.த.சா 9 ல் எவ்வளவு தொகை பெற்றுக்கொள்ளப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் ரூ15 லட்சம். அதில் உள்ள நான்கு விவரங்களில் கூட்டு தொகை எவ்வளவு என்றால் ரூ17 லட்சம் என உள்ளது.

8. மேற்படி கடிதம் எங்கு வைத்து டைப் செய்த விவரம் இல்லை என்றால் ஆமாம். அதை கனேசனை தான் கேட்க வேண்டும். பி.த.சா 9 கடிதம் ஆனது மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை கனேசனை தான் கேட்க வேண்டும். குற்றவியல் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் பொய்யான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.த.சா 5 க்கு பின்னிட்டு இந்த வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த பிறகு 3ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவனத்தின் தொழில் விலாசத்துக்கு வாதிகள் வரவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யும்வரை வந்தார்கள். பி.த.சா 5 படி 3ம் பிரதிவாதி நிறுவனம் கடன் கணக்கு ஆனது 28.9.2015 என்.பி.ஐ ஆனது என்றால் ஆக்கப்பட்டது. கணக்கு முடிக்கப்பட்டுவிட்டதால் ஆக்கப்பட்டது. 3ம் பிரதிவாதிக்கான வருமான வரியை 2012–13 க்கான ஆடிட்டர் கார்த்திகேயன் மூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 2013–14 க்கான வருமான வரி கணக்கை மேற் சொன்ன கார்த்திகேயன் மூலம் தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

9. எங்களுடைய தவறான நிர்வாகத்தின் மூலம் தான் 3ம் பிரதிவாதியின் வங்கிக்கணக்கு என்.பி.ஐ ஆனது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி நிறுவனம் கடன் கணக்கில் வாங்கிய மிசின்கள் நிறுவனத்தில் தொழில் விலாசத்தில் தான் உள்ளது என்றால் ஆமாம். அந்த மிசின்கள் ஸ்டேட் பாங் ஆப் இந்தியா அடமான சொத்துக்கள் என்றால் ஆமாம். 8.1.2014 ல் நான் ஆரமித்த M/s Bloom knit Finishers எனும் தனிநபர் ஸ்தாபனம் பற்றிவும் 20.12.2014 ல் நானும் என் மனைவியும் கூட்டாக ஆரமித்த M/s Bloom knit Finishers எனும் கூட்டாண்மை தொழில் குறித்தும் மிசின்கள் வாங்க வங்கி கடன் பெற்ற ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவுக்கு எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. நேரடியாக தான் சொன்னேன். மேற்படி வங்கியில் அடமான சொத்துக்களை தான் என்னுடைய இரு நிறுவனத்திற்காகவும் பயன் படுத்தியுள்ளேன் என்றால் ஆமாம். அதனால் தான் 28.9.2015 ல் 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் வங்கியின் கடன் கணக்கை என்.பி.ஐ செய்து விட்டேன் என்றால் சரியல்ல.

10. வங்கிக்கு சொந்தமான அடமான சொத்தை வங்கியின் அனுமதி பெறாமல் வேறுநிறுவனத்திற்கு பயன் படுத்தியுள்ளதும் குற்ற செயல் என்றால் வேறு நிறுவனத்திற்காக பயன் படுத்தவில்லை. என் பெயரில் ஆரமித்த தனிநபர் நிறுவனமும் நானும் என்னுடைய மனைவியும் கூட்டாக ஆரமித்த நிறுவனமும் 3ம் பிரதிவாதி நிறுவனமும் வெவ்வேறு ஆனவை என்றால் வேறு வழியில்லாததால் உபயோகப்படுத்தினேன். வா.த.சா 1 ன் கீழ் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் ஏற்படுததிக்கொண்டதாக கூறும் கூட்டாண்மை ஒப்பந்த பத்திரத்தில் அது போன்ற வேறு தொழில் ஆரமிக்கக்கூடாது என சரத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 3 பக்கங்கள் வேறு பட்டுள்ளது. 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் பங்கு தாரர்களில் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை என்றால் ஆமாம். 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு என்ன என்ன வாகனங்கள் வாங்கியுள்ளேன் என்றால் லோகநாதன் தான் வாங்கினார். 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு என மூன்று (நான்கு சக்கர) வாகனங்கள் வாங்கப்பட்டது என்றால் அது 2ம் வாதிக்கு தான் தெரியும். அதில் ஒரு வண்டி TN 37 AT 2620 வாங்கியுள்ளார் என்றால் வண்டி எண் சரியாக ஞாபகம் இல்லை வண்டியை பார்த்துள்ளேன். அதேபோல் TATA ACE TN 37 BD 2845 வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். 3 வது வண்டி Ford Fiesta TN 37 BK 9555 வாங்கியுள்ளார் என்றால் ஆமாம்.

11. 2013-14 வரைக்கான வருமான வரி கணக்கை தாக்கல் செய்ததற்கான நகலையோ தாக்கல் செய்துவிட்டேன் என்ற விவத்தையோ 1ம் வாதிக்கு தெரிவித்தேனா என்றால் இல்லை. 1ம் வாதி ஆடிட்டருக்கு அறிவிப்பு அனுப்பி கேட்டு இருந்தார். ஆடிட்டரிடம் என்ன கேட்டு இருந்தார் என ஆடிட்டர் எனக்கு சொன்னாரா என்றால் சொன்னார். எழுத்து மூலமாக கொடுததாரா என்றால் இல்லை. ஆடிட்டரிடம் வாதிகள் என்ன கேட்டார் என்பது தெரியாது. நானும் கேட்கவில்லை ஆடிட்டரும் சொல்லவில்லை. வாதிகள் கேட்டதாக கூறும் கடிதத்தில் ஆடிட்டருக்கு சம்மந்தப்பட்டதும் அல்ல என பதில் அளித்துள்ளார் என்றால் ஆமாம். 2012 க்கு முன்னர் 3ம் பிரதிவாதி நிறுவன தொழில் விலாசமான வாடகை சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு சுவாதினத்தில் தான் இருந்தது என்றால் ஆமாம்.

12. 2015 ல் குற்ற எண் 7/15 ஆனது பதிவு ஆனது பின்னிட்டு வாதிகள் 3ம் பிரதிவாதி நிறுவன தொழில் விலாசத்திற்கு வரவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் எதிர் வழக்குரை எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் மேற்படி எதிர்வழக்குரையில் மேலே சொன்ன மூன்று வாகனங்கள் எங்கு உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மூன்று வாகனங்களும் தற்போதும் 3ம் பிரதிவாதி நிறுவன தொழில் விலாசத்தில் உள்ளதா என்றால் இல்லை. எவ்வளவு வண்டி உள்ளது என்றால் அந்த மூன்று வாகனங்களும் தற்போது இல்லை. வண்டி என்ன ஆனது என்றால் ஈச்சர் வண்டிக்கு ஆர்சி புக் இல்லாததால் வாகனத்தின் பதிவு ரத்து செய்யப்பட்டுள்ளது எனவும் ஆர்சிபுக் கொண்டு வந்தால் தான் என்ன நிலையில் உள்ளது என்பதை பார்க்க முடியும் என காவல் நிலையத்தில் சொல்லிவிட்டார்கள். மேற்படி வண்டி உபயோகத்தில் இருந்தது என்றால் ஆமாம். எந்த தேதியில் காவல் நிலையதில் வைத்துள்ளார்கள் என்றால் ஞாபகம்இல்லை.

13. TATA ACE என்ன ஆனது என்றால் அது உபயோகத்தில் இருந்தது தற்போது உபயோகப்படுத்த முடியாமல் Scrab க்கு போட்டுவிட்டோம். எந்த தேதியில் எவ்வளவு தொகைக்கு Scrab செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. Ford Fiesta என்ன ஆனது என்றால் காரனாம்பேட்டை அருகே விபத்துக்குள்ளாகி Scrab க்கு போட்டுவிட்டோம். எந்த தேதியில் எவ்வளவு தொகைக்கு Scrab செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. விபத்து எந்தி தேதியில் ஆனது என்றால் அதுவும் ஞாபகம் இல்லை. மூன்று வாகனங்களும் Scrab ஆனதை எந்த கணக்கில் எழுதினோம்

என்றால் கம்பெனி கணக்கில் தான் எழுதினோம். எந்த கம்பெனி என்றால் ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும். 2017 ல் நான் என்னுடைய மனைவி மைத்துனர் நித்தியானந்தம் மற்றும் சுரேஷ் ஆகியோர் Bloom knit Finishers சேர்ந்து ஆரமித்தோம் என்றால் சரிதான். மேற்படி நிறுவனமும் 3 ம் பிரதிவாதி நிறுவன தொழில் விலாசத்தில் அமைக்கப்பட்டது என்றால் ஆமாம். 8 என இருந்து தொழில் இருந்த முகவரியை 8E என எடுத்துக்கொண்டோம் என்றால் நான்கு பகுதியாக இருந்ததால் எடுத்துக்கொண்டோம். 8 மற்றும் 8E ம் ஒரே கட்டிடம் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI
Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.03.20 19:05:25 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.